Deposition of witness
(Chapter XXIII code of Criminal Procedure)
In the court of Judicial Magistrate No.I, Tindivanam.

**CASE NO.CC. 59/2024 PW-2**

Name : அலிமாபி
Father / Husband name : நபியகான்
Village : கிராண்டிபுரம்
Age : 53
Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 this day 07.11.2025

Accused present. APP present.

**முதல் விசாரணை ( நேரம் 11.26 - 11.54 )**

நான் கூலி வேலை செய்கிறேன். அ.சா.1 எனது மகள். சாட்சி நபியகம் எனது கணவர். பட்டியல் சாட்சிகள் அப்துல்ரஜித், ஜான்பாஷா, மமுதுபி, பஷீர், இன்பவள்ளி ஆகியோர்கள் எனது ஊரை சேர்ந்தவர்கள். ஆஜர் எதிரியை எனக்கு தெரியும். வழக்கின் எதிரிகளை எனக்கு தெரியும். 2019 ம் வருடம் எனது மகளுக்கு திருமண ஏற்பாடு செய்தோம். எனது மகள் திருமணம் வேண்டாம் என்று சொல்லி ஆஜர் எதிரியை காதலித்து 2019 ம் வருடம் பதிவு திருமணம் செய்துகொண்டதாக சொன்னார். பின்னர் எதிரி எங்கள் வீட்டிற்கு வந்து எனது மகளை திருமணம் செய்துகொண்டதாகவும், 6 மாதம் எனது மகளை பார்த்துக்கொள்ள வேண்டும் எனவும், பின்னர் எதிரி வந்து எனது மகளை அழைத்துசெல்வதாக சொன்னார்.

2. எதிரியின் வீட்டில் பிரச்சனை இருப்பதால் தற்போது எனது மகளை அழைத்துச்செல்லவில்லை எனவும், 6 மாதத்தில் அழைத்துசெல்வதாகவும் கூறினார். சுமார் 1 மாதம் கழித்து திருமணத்தை பற்றி தெரிந்து எதிரியின் வீட்டிலிருந்து அன்புமணி என்பவர் எனது மகளுக்கு போன் செய்து எங்கள் வீட்டிற்கு வந்துவிடுவாயா என்று மிரட்டினார், அதற்கு எனது மகள் பயந்துகொண்டு விஷம் சாப்பிட்டுவிட்டார். எனது மகளை திண்டிவனம் அரசு

மருத்துவமனையில் சேர்த்தோம். அப்போது எதிரி வீட்டிலிருந்து புரட்சிமணி எனக்கு போன் செய்து பிரச்சனையை பேசிக்கொள்ளலாம் என்று சொன்னார், ஆனால் பேசவில்லை. மருத்துவமனையிலிருந்து வந்தபிறகு நானும் எனது மகளும் வெண்மணியாத்தூரிலுள்ள எதிரியின் வீட்டிற்கு சென்றபோது எதிரியின் அம்மா, எதிரிகள் தம்பிகள் 2பேர் இருந்தார்கள். அவர்களிடம் நான் கேட்டபோது எதிரியின் அம்மா எங்களை தேவிடியா என்று அசிங்கமாக திட்டி வேற யாரும் கிடைக்கவில்லை என்று கேட்டு விரட்டிவிட்டார்கள்.

3. சுமார் 10, 15 நாட்கள் கழித்து எதிரியின் ஊரிலுள்ள ஆறுமுகம் என்பவர் மூலமாக பேச தாமரைக்குளத்தில் எதிரி மற்றும் அவரின் உறவினர்கள் வந்தார்கள். நானும் எனது மகளும் சென்றோம். எதிரி எனது மகளை யார் என்று தெரியாது என்று சொல்லிவிட்டார். அங்கிருந்தவர்கள் எனது மகளை தாமரைக்குளத்தில் விழுந்து சாகுமாறு சொல்லிவிட்டு அங்கிருந்து சென்றுவிட்டார்கள். சுமார் 10, 15 நாட்கள் கழித்து வெண்மணியாத்தூரில் உள்ள எதிரியின் பங்காளி முறை அண்ணனிடம் நானும் எனது மகளும் சென்று விவரம் சொன்னோம். அந்த வீட்டில் யாரும் இல்லாததால் சமத்துவபுரத்திலிருந்து எனது மகனின் வீட்டிற்கு சென்று தங்கிவிட்டோம். அன்றையதினம் மாலை எனது மகனின் வீட்டு வாசில் மகள் உட்கார்ந்திருந்தபோது எதிரியும் அவரின் தம்பி புரட்சிமணியும் வந்து மகளை அடித்துவிட்டார்கள். சத்தம் கேட்டு நானும் எனது மருமகளும் வெளியில் வந்தபோது எதிரி மற்றும் தம்பி புரட்சிமணியும் எங்களை கையால் அடித்துவிட்டார்கள். அதில் நான் மயங்கிவிழுந்துவிட்டேன். பின்னர் நானும் எனது மகள்கள் ஷமீம், பாமிதா ஆகியோர்கள் திண்டிவனம் அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்கு சென்றோம்.

4. பின்னர் மறுநாள் ரோசனை காவல் நிலையத்தில் புகார் கொடுக்க சென்றபோது எதிரி மற்றும் அவரின் தம்பி புரட்சிமணியும் எங்கள் காலில் விழுந்தததல் நாங்கள் புகார் கொடுக்கவில்லை. எனது மகள் ஷமீம் திண்டிவனத்திற்கு

வேலைக்கு சென்றபோது ஆட்டோவை நிறுத்தி எதிரி எனது மகளை செருப்பால் அடித்துவிட்டதாக எங்களிடம் சொன்னார். நாங்கள் எங்கள் ஊரிலிருக்கும் வேலாயுதம் என்பவரிடம் மேற்படி விவரத்தை சொல்லி எதிரி தெய்வசிகாமணியிடம் கேட்கசொல்லியிருந்தோம். வேலாயுதம் எதிரியை எங்கள் ஊர் மாரியம்மன்கோவில் அருகே வரவைத்து கேட்டபோது நானும் எனது மகளும் இருந்தோம். எதிரி எனது மகளை யார் என்று தெரியாது என்று முதலில் சொன்னவர், பின்னர் அவர் எனது மகளிடம் தோழிமுறையில் பழகியதாக சொன்னார். பின்னர் ஒருவாரம் கழித்து எனது மகள் வேலைக்கு செல்வதற்காக திண்டிவனம் சென்றபோது எதிரி தெய்வசிகாமணியிடம் அவரின் திருமணம் குறித்து கேட்டபோது தெய்வசிகாமணி பாட்டிலில் விஷத்தை வாங்கிகொடுத்து குடித்து செத்துப்போ என்று சொல்லியதால், எனது மகள் அந்த விஷயத்தை குடித்துவிட்டார். அதனை கேள்விபட்ட எனது மகளை திண்டிவனம் அரசு மருத்துவமனைக்கு அழைத்துசென்று காப்பாற்றினேன். 5, 6 நாட்களுக்கு பிறகு மருத்துவமனையில் சிகிச்சை முடித்து வந்தபோது எதிரி தெய்வசிகாமணி எங்கள் பின்னால் வந்து எனது மகளை எங்கள் வீட்டின் அருகில் வைத்து கையால் அடித்தார்.

5. எதிரியின் ஊரிலுள்ள சிவப்பிரகாசம் எனக்கு போன் செய்து மகளுக்கு செட்டில்மண்ட் பெற்றுதருகிறேன் என்று வாங்கிக்கொள்ளுமாறு சொன்னார். எனது மகள் முடியாது என்று சொன்னதால் சிவப்பிரகாசம் தலைமையில் வெண்மாணியாத்தூர் தாமரைக்குளத்தில் மீண்டும் எதிரியின் குடும்பத்துடன் பஞ்சாயத்து பேசினோம். ஆனால் எதிரி தரப்பில் எனது மகளை ஏற்றுக்கொள்ளாமல் எதிரி தெய்வசிகாமணி மகளை காலால் எட்டி உதைத்துவிட்டார். அதனால் நாங்கள் பேட்டை காவல் நிலையத்தில் புகார் கொடுக்க சென்றபோது எனது கணவர் வேண்டாம் என்று சொன்னதால் நாங்கள் வீட்டிற்கு வந்துவிட்டோம். பின்னர் ஒரு மாதம் கழித்து எனது மகள் திண்டிவனம் வேலைக்கு சென்றபோது எதிரி தெய்வசிகாமணி தேர்தலில் நிக்கபோவதாக

சொல்லி தொந்தரவு செய்யவேண்டாம் என்று சொன்னதால் எனது மகள் அவரின் திருமணம் குறித்து கேட்காமல் இருந்தார். ஒரு மாதம் கழித்து தெய்வசிகாமணி வேறு ஒரு பெண்ணை அவரின் வீட்டிற்கு அழைத்துவந்திருந்தார். அது தெரிந்து எனது மகள் திண்டிவனம் பேருந்தில் செல்லும்போது எதிரி மற்றும் அந்த பெண்ணும் ஒருநாள் வந்தபோது இரண்டுபேரும் சேர்ந்து எனது மகளை செருப்பால் அடித்துவிட்டதாக சொன்னார். பின்னர் விழுப்புரம் எஸ்பி அலுவலகத்தில் புகார் கொடுத்தார். போலிசார் வழக்கு சம்மந்தமாக என்னை விசாரித்தார்கள்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

இல்லை.

**Sd/ M.Elavarasi,**
**Judicial Magistrate No.I, Tindivanam**